**தலைப்பு 120 – மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் *மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால்* வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் *மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின்* நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

- எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 120-2-03-20-2509 ஆம் இலக்கம் மற்றும் 120-02-04-15-2509 ஆம் இலக்க செலவினங்களின் நோக்கங்களுக்கு முரணாக அலுவலக உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 1,638,790 செலவிடப்பட்டிருந்தது. | மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்கு செலவிடப்படும் செலவினம் குறித்த நிதி ஏற்பாடுகளின் கீழ் செலவிடப்பட வேண்டுமெனவும் உரிய செலவின விடயங்களின் நோக்கங்களுக்காக செலவிடப்படும் செலவினம் அச்செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட வேண்டுமெனவும் | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்படுவதால் உரிய செலவினம் இச்செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) கட்டுநிதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதியின் கூட்டுத்தொகை ரூபா 892,679,098 ஆக இருந்த போதிலும் நிதிச்செயலாற்றல் அறிக்கையில் அது ரூபா 904,671,322 என குறிப்பிடப்பட்ட காரணத்தினால் ரூபா 11,992,224 கூடுதலாக | திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி சரியாக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டுமெவும் | திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட தவறினை சீராக்குவதற்காக நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது. |

நிதிக்கூற்றுக்களில்
காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **இழப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழான மாதிரியின் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டுமெனவும் | பதில் கிடைத்திருக்கவில்லை. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| i. நிதிப்பிரமாணம் 633 | 6,336,399 | சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் புத்தகங்கள் கட்டுதல் என்பன உரிய நியதிகளின் பிரகாரம் அரச அச்சகத்தின் மூலம் மேற்கொள்ளப்படாமல் தனியார் அச்சகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ii. | நிதிப்பிரமாணம் 103(1)(ஊ) | 13,902,198 | 3 சந்தர்ப்பங்களின் போது இடம்பெற்ற வாகன விபத்துக்கள் தொடர்பாக இடம் பெற்ற நட்டங்கள், சேதங்கள் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பின்னர், பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| iii. | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச்சுற்றறிக்கை | - | அமைச்சின் செயலாளர்கள் இரண்டு பேரும் தமது சேவைக் காலத்தில் இரண்டு வாகனங்கள் வீதம் பயன்படுத்தியிருந்தனர். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கவனத்தில் கொள்ள வேண்டும். | இந்த அமைச்சின் கடமைகளில் முன்னைய செயலாளர்களால் பேணப்பட்ட நடைமுறையொன்றாகும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 09 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டில் 40 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | தேவைப்பாடு உருவாகாமை, அரசியல் நிலைப்பாடு, சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் காணப்பட்ட நிர்வாக ரீதியாக சிக்கல்கள் இச்சேமிப்புக்கு காரணங்களாக இருந்தன. |
| (ஆ) மீளாய்வாண்டில் 03 செலவின விடயங்களுக்காக ரூபா 367,500,000 ஆன குறைநிரப்பு ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 54,741,448 செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | சாத்தியவள ஆய்வின் போது நடைமுறைப் பிரச்சினைகள் உருவாகியமை, முன்பள்ளி பாடசாலைகளை இனங்காணுதல் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கூடிய காலம் எடுத்தல். சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் காணப்பட்ட நிர்வாக ரீதியான பிரச்சினைகள் போன்ற விடயங்களின் பேரில் இந்நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நல்லாளுகை பயன்பாடுகளை உறுதிப்படுத்தும் முகமாக தொடர்புடைய தேவைகளை வழங்குதல் மற்றும் கொள்கைகள் தயாரித்தல், அமுல் நடத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைச்சின் செயற்பணி எனினும், சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை உறுதிப்படுத்தல், பாதுகாத்தல், மேம்படுத்தலுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட கொள்கைகளை அமுல்ப்படுத்தி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 திட்டமிடல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த ஆண்டிற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர், உள்ளடக்கப்படும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் | எதிர்காலத்தில் சரியாக தயாரிக்கப்படும் |

## 3.3. எதிர்பார்க்கப்பட்ட நிறைந்த மட்டங்கள் பெற்றுக்கொள்ளாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல மந்திரின் ஒரு பகுதியில் பகல் நேர பாதுகாப்பு நிலையமொன்றை நிர்மாணித்தல் மற்றும் தேவையான உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 1.5 மில்லியனான நிதி ஏற்பாட்டில் ரூபா 1,257,000 பாராளுமன்ற பொது செயலாளருக்கு 2018 செப்தெம்பர் மாதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் அப் பணம் பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாட்டை உயர்ந்த செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும் | பதிலை பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்துள்ள பெண்களுக்காக மாற்று வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக 13 பிரதேச செயலக பிரிவுகளின் 81 நலனாலிகளுக்கு ரூபா 2 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் 7 பிரதேச செயலக பிரிவுகளில் 55 செயற்திட்டங்ககள் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும் | பதிலை, பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான உடனடி உதவிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3 மில்லியனான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 6 நலனாளிகளுக்கு மாத்திரம் ரூபா 378,329 ஆன நலன்கள் வழங்கப்பட்டிருந்தமை. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நிதி ஏற்பாடு செயற்திறனான வகையில் பயன்படுத்த வேண்டும் | நலனாளிகள் விண்ணப்பித்திருக்கவில்லை. |
| (ஈ) | கௌரவ இராஜாங்க அமைச்சர் 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி இராஜினாமா செய்திருந்ததுடன்120-1-11-1409 ஆம் இலக்க இராஜாங்க அமைச்சின் செலவின விடயத்தின் கீழ் ரூபா 350,000 | சரியான செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட வேண்டும். | இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாம செய்ததன் பின்னர் அப்பதவி அமைச்சரினால் மேவுகை செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டு ஒக்தோபர் 11 ஆந் திகதி அமைச்சருக்காக வாடகை அடிப்படையில் வாகனமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (உ) | ஐக்கிய நாடுகளின் குடித்தொகை நிதியத்திலிருந்து (UNFPA) செயற்படும் குடியுரிமை கல்விக்காக உள்ள உரித்துக்களை மேம்படுத்துதல் மற்றும் தரவு முறைமையொன்றை பயன்படுத்துவதற்காக வருடாந்த மதிப்பீட்டிலிருந்து ரூபா 22,800,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 இன் 3 ஆம் காலாண்டில் ரூபா 1,098,455 கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 72,693 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நிதிஏற்பாடு உயர் வினைத்திறனுடன் பயன்படுத்தடல் வேண்டும். | மாவட்ட மற்றும் பிரதேச செயலமர்வு ஒழுங்குபடுத்துவதற்கு திட்டமிட்ட போதிலும் அரசியல் நிலைமை அடிப்படையில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்த முடியாதிருந்தது. |
| (ஊ) | திரியகாந்தா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3 செயற்பாடுகள் மற்றும் தேசிய மகளிர் குழுவின் 4 செயற்பாடுகளுக்காக ரூபா 9.56 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 2.22 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் பௌதீக செயலாற்றல் 10 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நிதிஏற்பாடு உயர் வினைத்திறனுடன் பயன்படுத்தடல் வேண்டும். | பதிலை, பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | நாளாந்த வாழ்வில் பெண்களுக்கு இடம்பெறும் கொடுமைகள் மற்றும் சவால்களுக்கு ஆக்கபூர்வமாக முகங்கொடுப்பதற்காக தெளிவொன்றை வழங்குவதற்கும் ஏதேனுமொரு வகையில் சலுகையொன்றை வழங்கும் நோக்கில் நூலொன்றை வெளியடுவதற்காக ரூபா 200,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>கோட்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் 2018 மார்ச் வரையில் நூலை வெளியிடுவதற்கும் 1000 | நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நிதிஏற்பாடு உயர் வினைத்திறனுடன் பயன்படுத்தடல் வேண்டும். | பதிலை, பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

பிரதிகளை அச்சிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இச்செயற்பாட்டிற்காக ரூபா 180,550 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2019 மே 20 ஆந் திகதிய கணக்காய்வு திகதி வரை 350 பிரதிகளை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

**3.4 எதிர்பார்க்கப்பட்ட சான்றுகள் பெற்றுக்கொள்ளாமை.**

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் கைத்தொழில் துறையில் பெண்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்களை வலுவூட்டும் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 4 மில்லியனான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு 02 விற்பனை நிலையங்கள் நிர்மாணத்திற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.01 மில்லியன் செலவு செய்து ஒரு நிலையம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ரூபா 5.47 மில்லியன் செலவிடப்பட்டு 02 விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2019 மே 08 ஆந் திகதி வரை ஒரு நிலையம் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிலை, பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இடர்களுக்கு உட்பட பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக சலுவை வழங்கும் நோக்கில் ரூபா 3 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு 08 நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றாமல் 31 குடும்பங்களுக்காக ஆரோக்கிய நலன் வசதிகள் வழங்குவதற்காக ரூபா 093 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொண்ட நோக்கங்களுக்காக பணம் செலவிடப்பட வேண்டும். | பதிலை, பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 முகாமைத்துவ வளங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான விவசாய செயற்திட்டத்தின் கீழ் 2017/2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 2.2 மில்லியனான நிதி ஏற்பாடு 22 பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் இந் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 296,950 மற்றும் அறவிடப்பட்டுள்ள ரூபா 938,457 ஆன தவணைப் பணத்தையும் உரிய அங்கீகாரமின்றி மகளிர் சங்கங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 19 விவசாய கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. | முறையான அங்கீகாரமின்றி ஆரம்பிக்கப்பட்ட கணக்குகளில் பணம் வைப்பு செய்யக்கூடாதெனவும் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | சுற்றுலா அமைச்சின் மூலம் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த அம்பாறை மாவட்டத்தின் பொது வர்த்தக தொகுதி நிர்மாண செயற்பாடு பிரதேச செயலாளரின் அல்லது சுற்றுலா அமைச்சின் எவ்வித வேண்டுகோள் இல்லாமல் இந்த அமைச்சு பொறுப்பேற்று 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 5.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | உரிய அதிகாரமின்றி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடாதெனவும் | சுற்றுலா அமைச்சின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை. |

**3.6 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஆ) | பெண்கள் கீதங்களை மீள்மெருகூட்டல் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான நியதிகளை | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க | காணப்பட்ட தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்துவதற்காக முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 26,688,400 செலவிடப்பட்டிருந்த துடன் பெறுகை செயற்பாடு தொடர்பாக பரிசோதனையின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 பிரிவு 2.6.1 (அ)(ii) மற்றும் 2.8.1 (ஆ) பிரிவுகளின் பிரகாரம் அறிக்கை வைக்கப்படாமை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விதந்துரைகளின் மீளாய்வு மற்றும் அங்கீகரிக்கப்படாமை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமனம் செய்யப்படாமை மற்றும் விடயத்துடன் தெடர்பான நிபுணத்துவ அங்கத்தரொருவர் பங்கு பெறச்செய்யப்படாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | உலக சிறுவர் தின தேசிய விழாவிற்காக சஞ்சிகை அச்சிடல் உணவு பானங்கள், மேடை அலங்காரம் மற்றும் பேக் கொள்வனவிற்காக ரூபா 2,437,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அப்பெறுகையின் போது பெறுகை குழு தீர்மானம் எடுக்கப்படாமை பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சர்வதேச மகளிர் தின தேசிய விழாவை கொண்டாடுவதற்கான திரிய காந்தா செலவின விடயத்தின் கீழ் ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேடை அலங்கார ஒலி பெருக்கி மற்றும் ஊடாக செயற்பாடுக்காகவும் உணவு பானங்களுக்காகவும் பொலன்னருவ மாவட் செயலகத்திற்கு கடப்பாட்டுப் பத்திரத்தின் மூலம் நிதிஏற்பாட்டை அனுப்புவதற்கான வெளியக செயற்பாடுகளுக்காக ரூபா 8.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பெண்கள் | நிதிஏற்பாடு வினைத்திறனுடனும் ஆக்குபூர்வமாகவும் பயன்படுத்தடல் வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

முகங்கொடுக்கும் பாரதூரமான சமூக மற்றும் பொருளாதார சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்காக நிரந்தர தந்திரோபாயங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்துவதற்காக இப்பணம் செலவிடக்கூடியதாக இருந்தது.

### 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டின் போது மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் இராஜங்க அமைச்சரின் கடமைகளுக்காக வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் அவ்வாண்டின் போது விபத்திற்குட்பட்டிருந்ததுடன் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் இவ்வாகனம் விபத்திற்குட்பட்ட சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினரொருவரின் பிரத்தியேக சாரதி வாகனத்தை ஓட்டியிருந்தார். அவ் வாகனத்தை வேறொரு உறுப்பினரின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டமை தொடர்பாக அமைச்சு அறிந்திராமல் இருந்ததாக புலனாய்வு அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. | அரசிற்கு சொந்தமான சொத்துக்களை உரிய அதிகாரத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும் | குறித்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமான 17 வாகனங்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்படடிருந்தன. | முறையாக கையளிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அவ்வாகனங்களை கையேற்று பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் | கையளிப்பு நடவடிக்கைகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாகவும் |
| (இ) | அமைச்சினால் முறையாக கையேற்கப்படாத காணியொன்றில் ரூபா 25 மில்லியன் செலவு செய்து 2001 ஆம் ஆண்டின் போது பியகமவில் மகளிர் விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த துடன் 2019 மே 20 ஆந் திகதி வரை காணி கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு / கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கையளிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் |
| (ஈ) | இந்த அமைச்சினால் பயன்படுத்தப்படும் ஏனைய அமைச்சிற்கு சொந்தமான 13 வாகனங்களை இந்த அமைச்சிற்கு கையேற்பதற்கு முறையான நடவடிக்கை | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கையளிப்பு நடவடிக்கைகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாகவும் |

எடுக்கப்பட வேண்டும்.